Registered as a Newspaper

Keen Centre
88, பலாலி றோட்,
திருநெல்வேலி.
தூய பிரயோக கணிதம்
87 A/L
வினாவிடை வகுப்புக்கள்
திரு. ஈசன்
சனி, ஞாயிறு 3-00
88 A/L
சனி, ஞாயிறு 12-30
திரு. ஈசன்
89 A/L திரு. நல்லையா
ஆரம்பம்; (28-3 87)

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

விலை: ரூ. 1-25

KEEN CENTRE
88, பலாலி றோட்.
திருநெல்வேலி,
89 A/L
பொருளியல் – வரதராஜன்
கணக்கியல் – வன்னியசிங்கம்
அளவையியல் –
S S மனோகரன்
வர்த்தகம் – ரட்ணம்
இந்துநாகரிகம் – பாலா
தமிழ் – நாகேஸ்வரன்
புவியியல் அரசியல்
நடைபெறுகின்றன.
ஆரம்பம்: 28-3-87
சனி 3-00 மணி

சுடர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு பங்குனி மீ 12 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1407 றஜப் பிறை 25 (26.03.1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 102



கடந்த திங்கட்கிழமை அதிகாலை புலிகள் நடத்திய சாதனைத் தாக்குதலில் யுத்தக் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட எட்டுப் பேரும், நேற்று நல்லூர் முத்திரைச் சந்தையில் மக்கள் பார்வைக்காக அமர்த்தப்பட்டிருந்தனர்.

(படப்பிடிப்பு : ஜெயம்)

# 8 யுத்தக் கைதிகளும் மக்களின் பார்வைக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 26

பண்ணை பொலிஸ் விடுதி தாக்குதலின் போது விடுதலைப் புலிகளினால் யுத்தக் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட எட்டு ஸ்ரீ லங்கா சிப்பாய்களும் நேற்று மக்களின் பார்வைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர்.

நல்லூரை அண்டகடைசித் தமிழ் மன்னனான சங்கிலியனின் சிலைக்கு அருகாமையில் உள்ள சந்தியில் இவர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர்.

கொளுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாத ஆயிரக்கணக்கான பெண்களும், ஆண்களும், சிறுவர்களும் நீண்ட வரிசையில் இவர்களைப் பார்க்க காத்து நின்ற (4ஆம் பக்கம் பார்க்க)

## விடுவிக்கும் முயற்சியில் உயரதிகாரிகள்

கொழும்பு, மார்ச் 26

தமிழீழ விடுதலைப் புலிகளினால் சிறை பிடிக்கப்பட்டுள்ள ஐந்து சிப்பாய்கள், மூன்று பொலிஸார் ஆகியோரை விடுவிக்கும் முயற்சியில் உயர் அரசியல், இராணுவ அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

–இப்படிப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன என்று கொழும்பு ஆங்கிலத் தினசரியான 'த ஐலண்ட்' நேற்று செய்தி வெளியிட்டது.

இதற்காக யாழ். பலாலி முகாமுக்குச் சென்றுள்ள சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் குடா நாட்டில் உள்ள செல்வாக்கு மிக்க பிரசைகள் குழுக்களுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் அந்தச் செய்தி தெரிவித்தது.

சிறைப் பிடிக்கப்பட்ட சிப்பாய்களுக்கும் பொலிஸாருக்கும் துன்பம் எதுவும் இழைக்க வேண்டாம் என்று அரசாங்கம் தீவிரவாதிகளைக் கோரியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

–இப்படி பாதுகாப்பு வட்டாரம் தெரிவித்ததாக 'த ஐலண்ட்' செய்தியில் மேலும் கூறப்பட்டிருந்தது. (உ-எ)

# மட்டக்களப்பில் நேற்று கண்ணிவெடிக்கு 15 படையினர் பலி

## 'பவ்வில்' சின்னாபின்னம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

மட்டக்களப்புப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் பதினைந்து கொமாண்டோக்கள் கொல்லப்பட்டனர். பவ்வின் வாகனம் ஒன்று தூக்கிவீசப்பட்டு சின்னாபின்னமாகியது. இப்படி விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்தனர்.

மட்டக்களப்பு கொம்மாதுறைப் பகுதியில் புதிய இராணுவ முகாம் ஒன்றை அமைத்துக்கொண்ட கொமாண்டோப் படையினர் 2 ஜீப், பவ்வின் வாகனம், டிரக் ஆகியவற்றில் பட்டிருப்புப்பாலத்துக்குச் சென்று உணவுப் பொருள்களை ஏற்றி வந்தனர்.

நேற்றுப் பிற்பகல் மூன்று மணி அளவில் பளுகாமத்திற்கும் போரதீவுக்கும் இடையில் கொமாண்டோக்களின் வாகனங்கள் சென்று கொண்டிருந்த பொழுது விடுதலைப் புலிகள் (4ஆம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

26—03—1987
வியாழக்கிழமை

சுபநேரம்:
7-45 முதல் 9-15 வரை ரிஷபலக்னம் :
1-45 முதல் 3-15 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## இராணுவப் படையில் சேருவோருக்கு 22 வருடம் கட்டாய சேவை

கொழும்பு, மார்ச் 26

ஸ்ரீலங்கா இராணுவத்தில் சேருபவர்கள் இனி 22 ஆண்டு காலம் கட்டாயசேவை புரியவேண்டும்.

இதற்கு ஏதுவாக இராணுவ ஆட்சேர்ப்புச் சட்டப் பிரமாணம் திருத்தி அமைக்கப்படவுள்ளது.

தற்போதைய பிரமாணம் 1951ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டது.

அதனைத் திருத்தி அமைக்கும் சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

ஜனாதிபதி செய்த சிபார்சின்மீதே இத்திருத்தச் சட்டத்துக்கு நேற்று அமைச்சரவை அங்கீகாரம் அளித்தது.

இத் திருத்தத்தின்படி (4ஆம் பக்கம் பார்க்க)

## இப்படியும் துரோகமா?

யாழ்ப்பாணம், மார்ச் 26

எரிபொருள் கூப்பன்களைப் பெறுவதற்காக குடாநாட்டு மக்களில் ஒரு சிலர் இராணுவ முகாம்களுக்குச் சென்றார்களா?

பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள், இங்குள்ள சிவில் அதிகாரிகளுக்குத் தெரிவித்த தகவல்கள் இந்தச் சந்தேகத்தைக் கொடுத்திருப்பதாக உதயனுக்கு நம்பிக்கையாகத் தெரிய வந்துள்ளது.

மக்களைத் தூண்டி முகாம்களுக்குச் செல்ல வைத்து எரிபொருள் கூப்பன்களை வழங்குவதற்காகப் பாதுகாப்பு அமைச்சு இவ்வாறு திரிக்கப்பட்ட தகவல்களைத் தெரிவிக்கக் கூடிய சாத்தியம் உண்டு.

எனினும் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் நிர்வாக அதிகாரிகளுக்கு புள்ளி விவரங்களுடன் தகவல் தெரிவித்திருப்பதால் அவ்வாறு நினைக்கத் தோன்றவில்லை என்று கருத்து வெளியிடப்பட் (4ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டைப் பொலிஸ் கான்ஸ்டபிள் நேற்று சூட்டுக்கு இலக்கானார்

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ் கோட்டையில் உள்ள பொலிஸ் நிலையத்தில் இருந்து வெளியே வந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பாதுகாப்புப் படையினரின் சூட்டுக்கு இலக்கானார்.

நேற்றுக் காலை பிரதான வீதியில் உள்ள மைய வாடி வீட்டுக்கு அருகாமையில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

பாதுகாப்புப் படையினரின் சூட்டுக்கு இலக்கான பொலிஸ் கான்ஸ்டபிள் கடமை நேரத்தில் பொலிஸ் நிலையத்திலிருந்து வெளியே வந்ததாகவும்–

அதேசமயம் விடுதலைப் புலிகளுக்கும் சிப்பாய்களுக்கும் இடையில் துப்பாக்கிப் பிரயோகங்கள் (4ஆம் பக்கம் பார்க்க)

## நாவற்குழியில் ஹெலி, ஷெல் தாக்கு

### போராளி ஒருவர் வீர மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

நாவற்குழி இராணுவ முகாமில் இருந்து நேற்றுக்காலை பலமுறை ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அப்பகுதியில் ஹெலிக்கொப்டர் தாக்குதலும் நடத்தப்பட்டது.

ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி விடுதலைப் (4ஆம் பக்கம் பார்க்க)



விடுதலைப் புலிகளினால் யுத்தக் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட ஸ்ரீலங்கா சிப்பாய்கள், கொமாண்டோக்கள் எட்டுப் பேரையும் நேரில் பார்ப்பதற்காக ஏராளமான பொதுமக்கள் கியூ வரிசையில் காத்து நின்ற பொழுது பிடிக்கப்பட்ட படம்.



கிரனேட் தாக்குதலில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கு சிப்பாய்கள் அணியும் கவச அங்கியும், தொப்பியும் மேலே காணப்படுகின்றன.

## இன்றும் மக்கள் பார்வைக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 26

விடுதலைப் புலிகளினால் யுத்தக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டிருக்கும் எட்டு ஸ்ரீலங்கா சிப்பாய்கள் இன்றும் மக்கள் பார்வைக்காக வைக்கப்படவுள்ளனர்.

யாழ்ப்பாணம் தவிர்ந்த வேறு ஒரு பிரதேசத்தில் இவர்கள் வைக்கப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டபோதும் குறிப்பாக எந்த இடம் என்று அறிவிக்கப்படவில்லை. (உ–10)

முச்சந்தி மூளி



ஒலத்தைக் கெடுக்கிற கோடரிக் காம்புகள் எங்கையும் இருக்கத்தான் செய்யும். ஆனால் அதுகளுக்கு இடம் குடுக்கக் கூடாது. பிடிச்சு நல்ல பாடம் படிப்பிக்க வேணும்.

## மாணவிகள் மீது ஹெலி சூடு!

### கோப்பாயில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

பாடசாலை மாணவிகள் மீது ஹெலிக்கொப்டர் நடத்திய தாக்குதலில் இரண்டு மாணவிகள் காயமடைந்தனர்.

கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அண்மையில் நேற்று இந்தச் சம்பவம் நடைபெற்றது.

இருபாலையில் உள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் வகுப்புக்களை முடித்துக் கொண்டு மாணவிகள் வீடு நோக்கி திரும்பிக்கொண்டிருந்தனர்.

அப்பொழுது கோப்பாய் வயல்வெளிகளுக்கு மேலாக வந்த ஹெலிக்கொப்டர் பாடசாலை மாணவிகள் மீது திடீர் தாக்குதலை நடத்தியது.

இதன் காரணமாக இரண்டு மாணவிகள் காயமடைந்தனர். ஏனையோர் சிதறி ஓடித் தப்பினர்.

காயமடைந்த மாணவிகளில் ஒருவர் கோப்பாய் ஆஸ்பத்திரியிலும் மற்றையவர் யாழ் ஆஸ்பத்திரியிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நட்செறின் கந்தினி(19 வயது) என்ற மாணவியே யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார். இவருக்கு முதுகில் காயம் ஏற்பட்டுள்ளது. இவர் அச்செழுவைச் சேர்ந்தவர். (உ–10)

## வல்வெட்டித்துறை தொண்டமானாறில் பயங்கர ஷெல் தாக்குதல்கள்

வல்வெட்டித்துறை, மார்ச் 26

தொண்டமானாறு, வல்வெட்டித்துறை இராணுவ முகாம்களில் இருந்து கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவில் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களால் கம்பர் மலைப்பகுதியில் பல வீடுகள் சேதமடைந்தன.

கால்நடைகள் பல உயிரிழந்தன.

ஒரு பெண் பலத்த காயத்துடன் புலோலி ஆஸ்பத்திரியில் அனு (4ஆம் பக்கம் பார்க்க)

## தோப்பூரில் 5 படையினர் பலி

### ஈரோஸ் தாக்குதல்

யாழ்ப்பாணம், மார்ச் 26

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 9-30 மணியளவில் தோப்பூர் இராணுவக் காவல் அரண் மீது ஈரோஸ் போராளிகள் நடத்திய தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்

–இப்படி ஈரோஸ் இயக்கம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இன ஒழிப்பை மேற்கொண்டு வரும் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் இஸ்லாமியரைப் பெரும்பான்மையாகக் கொண்ட தோப்பூர் (4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

இன்னஞ் சிறு விளம்பரங்கள்

சேவை

Hyline (ஹைலைன்) வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள் Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் முழுப்பணம் செலுத்தி 1 வாரத்திற்குள் பெற்றுக்கொள்ளலாம். விலை 15/- சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். (1146)

தேவை

யாழ் மாவட்ட தேர்தல் தொகுதி அடிப்படையில் அனுபவமுள்ளவர்களிடமிருந்து விளம்பரம் சேகரிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பிணைப்பணம் செலுத்தக் கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் 28-3-87ஆந் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விளம்பர எண் - 57, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (57)


# கிளிநொச்சியில் கடும் வரட்சி
# பயிர்ச் செய்கை பெரும் பாதிப்பு

கிளிநொச்சி, மார்ச் 26

கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை சிறுபோக நெற்செய்கை உப உணவுப் பயிர்ச் செய்கை என்பன முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

மாரி மழைக் குறைவினாலும், கொடூர வெயிலினாலும் குளங்களில் உள்ள நீர் வற்றியுள்ளது.

கால் நடைகளுக்கான குடி தண்ணீருக்குக் கூட தட்டுப்பாடு நிலவும் அபாயம் தோன்றியுள்ளது.

இங்கு எப்போதுமில்லாதவாறு பலத்த வெய்யிலும், கடும் வரட்சியும் நிலவுகின்றன. பொது மக்கள் பலரும் கண்ணருத்தம்' வாய்ப்புண், சொறி, சிரங்கு போன்ற நோய்களினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

கால்நடைகள், கோழிகள் ஆகியன கடும் வெப்பம் தாங்க முடியாது நோய்க்குள்ளாகி நாளாந்தம் இறக்கத் தொடங்கியுள்ளன. குளங்களிலுள்ள மீனினங்கள் அழிந்து துர்நாற்றமெடுக்கத் தொடங்கியுள்ளது.

சுமார் 20 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்குக் கூடுதலான பகுதியில் சிறுபோக நெற்செய்கையையும் சுமார் ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான பிரதேசத்தில் உப உணவுப் பயிர்ச் செய்கையையும் மேற்கொள்வதற்கு நீர்ப்பாசனம் அளித்து வரும் வடபகுதியின் மிகப் பெரிய குளமான இரணைமடுவின் நீர் மட்டம் தற்போது சுமார் 5 அடிக்கு வற்றியுள்ளது.

இதனால் இக்குளத்தை நம்பி செய்கை பண்ணப்படும் சகல பயிர்ச் செய்கைகளும் இம்முறை முற்றாகத் தடைப்பட்டுள்ளன.

இக்குளத்திலிருந்து நீர் வழங்குவது சம்பந்தமான தண்ணீர்க் கூட்டம் அண்மையில் முரசமோட்டை நவஜீவனத்தில் நடைபெற்றது.

கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் சுமார் 30 அடி நீர் மட்டம் இருந்த இக்குளத்தில் இம்முறை 5 அடி நீர் மட்டம் கூட இல்லாதிருப்பது குறித்து சகலரும் கவலை தெரிவித்தனர்.

வன்னேரிக்குளம், கனகாம்பிகைக் குளம் ஆகியவற்றை அண்டிய பகுதிகளிலும் பயிர்ச்செய்கை முற்றாக மேற்கொள்ள முடியாததில் ஏற்பட்டிருக்கிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வறட்சி நிலைமை கவனத்தில் கொண்டு பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தகுந்த நிவாரணம் பெற்றுக் கொடுக்க இம்மாவட்ட உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்களின் சார்பாக கிராம அபிவிருத்தி சங்கங்களும், கிராம அபிவிருத்தி சங்கங்களின் ஒன்றியம், பிரசைகள் குழு போன்ற பொதுஸ்தாபனங்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றன.

(உ-76)

### பரிசு நூல்கள் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 26

இலங்கை இலக்கியப் பேரவையினால் நடத்தப்படும் 1985 ஆம் ஆண்டுக்குரிய பரிசு நூல்கள் போட்டிக்குப் போதிய நூல்கள் கிடைக்கவில்லை. ஆகவே 1985 ஆம் ஆண்டு நூல்களுடன் 1986 ஆம் ஆண்டு வெளிவந்த நூல்களையும் சேர்த்துப் பரிசிலனை செய்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

1986 ஆம் ஆண்டில் நூல்களை வெளியிட்ட ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் தங்கள் நூல்களில் ஒவ்வொரு பிரதியை இலங்கை இலக்கியப் பேரவை செயலாளருக்கு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டரங்கு

### மெய்வல்லுநர் போட்டிகள்

## வட்டார ரீதியில் இனிமேல் நடக்காது

### கொத்தணி அடிப்படையிலே நடக்கும்

சாவகச்சேரி, மார்ச் 26

வட்டார ரீதியிலான மெய்வல்லுநர் போட்டிகள் இனிமேல் நடைபெறமாட்டா! கல்வி வட்டாரம் என்ற நிலை மாறி கொத்தணி அமைப்புக்கள் செயல்படத் தொடங்கியிருக்கின்றன. கொத்தணி மட்டத்திலும் அதை அடுத்து மாவட்ட மட்டத்திலுமே இனிமேல் மெய்வல்லுநர் போட்டிகள் நடைபெறும்.

இவ்வாறு வடமாநில கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம் எம் மக்சூர் கூறினார்.

சாவகச்சேரி கல்வி வட்டாரப் பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டிகள் மட்டுவில் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இந்த வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு அ. தங்கராசா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

நிர்வாகப் பரவலாக்கலை அடுத்து நெல்லியடியில் கோட்டக்கல்வி அலுவலகம் செயலாற்றுகிறது.

நல்லூர், மருதனாமடம், வேலணை, பண்டத்தரிப்பு கோட்டக்கல்வி அலுவலகங்களும் விரைவில் செயல்படும். இதனால் கல்விச் சீர்திருத்தத்துடன் ஆசிரியர் மாணவர்கள் பாடசாலைப் பிரச்சினைகள் இலகுவாக நீங்க வழிபிறக்கும்.

கல்வி அமைச்சால் பிரகடனப்படுத்தப்பட்ட தேசிய பாடசாலைகள் பட்டியலில் யாழ் இந்துக்கல்லூரியும் வேம்படி மகளிர் கல்லூரியும் இடம் பெற்றன.

மொத்தம் 50 தேசிய பாடசாலைத் திட்டத்தில் யாழ் இந்து மகளிர், தெல்லிப்பழை மகாஜன, சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகியவையும் இடம் பெற்று இருக்கின்றன.

இதனால் அதிபர்களுக்கு மேலதிக அந்தஸ்தும் அதிகாரங்களும் கிடைக்கும்.

நாட்டில் நிலவும் நெருக்கடிகள் அவலங்களுக்கு மத்தியிலும் இப்பகுதிப் பாடசாலைகளில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருப்பது கல்வியில் இப்பகுதி மாணவர்களிடையே உள்ள ஆர்வத்தையும் பற்றையும் வெளிப்படுத்தி உள்ளது

இப்படி அவர் கூறினார்.

(உ-31)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

### பஸ்ஸில் பிரசவம்!

யாழ்ப்பாணம், மார்ச் 26

மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ் ஒன்றில் பெண் ஒருவர் குழந்தை ஒன்றைப் பிரசவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

மன்னாரில் இருந்து வந்து கொண்டிருந்த பஸ் விடத்தல்தீவை அண்மித்தபோது இப் பெண்ணுக்கு பிரசவ நோவு ஏற்பட்டது.

அதே பஸ்ஸில் பயணம் செய்த ஒரு தாதியின் உதவியுடன் இவர் பெண் குழந்தை ஒன்றைப் பிரசவித்தார்.

இருவரையும் பஸ் பயணிகள் சங்குப்பிட்டியில் இருந்து மன்னார் சென்ற பஸ் மூலம் மீண்டும் மன்னாருக்கு அனுப்பிவைத்தனர். (இ-7)

## உழவு இயந்திரப் பெட்டியை மீட்கச் சென்றவர் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26

உழவு இயந்திரத்தின் பெட்டியை மீட்க இராணுவமுகாம் சென்றவர் சிப்பாய்களினால் தடுத்து வைக்கப்பட்டார்.

பூநகரி இராணுவ முகாமில் இச் சம்பவம் நடைபெற்றது.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது

பத்தினியாகாடு விநாயகர் ஆலயத்துக்கு அருகாமையில் உழவு இயந்திரம் ஓட்டிச் சென்றவர் மீது, ரோந்து வந்த சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதனை அடுத்து உழவு இயந்திரம் ஓட்டி வந்தவர் அதி வேகமாக உழவு இயந்திரத்தைச் செலுத்தவே பெட்டி கழன்று ஓடியது.

இராணுவத்தினர் பெட்டியை மீட்டு முகாமுக்குக்கொண்டு சென்றனர்.

மறுநாள்காலை உழவு இயந்திரத்தின் உரிமையாளர் தினமும் சிப்பாய்களுக்கு பாண் வழங்கும் பேக்கரி உரிமையாளரை சந்தித்து பெட்டியைப் பெற்றுத் தருமாறு கேட்டார்.

பேக்கரி உரிமையாளரும் இராணுவ பொறுப்பதிகாரியைச் சந்தித்த போது உழவு இயந்திரத்தைக் கொண்டுவந்து பெட்டியைக் கொண்டு போகுமாறு கூறப்பட்டது

உழவு இயந்திர உரிமையாளர் வேறு ஒரு சாரதியைப் பிடித்து முகாமுக்கு உழவு இயந்திரத்தை அனுப்பி வைத்தார்.

சிப்பாய்கள் உழவு இயந்திரதைக் கைப்பற்றி உதவி செய்யச் சென்றவரையும் கைது செய்தனர்.

நாங்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது உழவு இயந்திரத்தை ஓட்டி வந்த சாரதியே முகாம் வர வேண்டும் என்றும் அப்படி வந்தால்தான் உழவு இயந்திரத்தையும் நாம் பிடித்து வைத்திருப்பவரையும் விடுவிக்க முடியும் என்றும் தெரிவித்தனராம்.

இதனை அடுத்து முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவரின் மனைவி ஏழு பிள்ளைகளுடன் கண்ணீரும் கம்பலையுமாக இருக்கின்றார்

(இ-10)

### பிரசைகள்குழு பொதுக் கூட்டம்

சுன்னாகம்] பிரசைகள் குழுவின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை திரு தி. மாணிக்கவாசகர் தலைமையில் சுன்னாகம் ஸ்ரீமன் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது

சிறப்பு விருந்தினர்களாக உடுவில் உதவி அரச அதிபர் திரு. ஆ. மாணிக்கம், யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அம்பிரட், ஓய்வுபெற்ற நீதிபதி திரு. ஜே ஜி ஆசீர்வாதம் ஆகியோர் கலந்து சிறப்பிப்பார்கள்.

வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு இருபதுக்கும் மேற்பட்ட பிரேரணைகள் பொது மக்களிடமிருந்து அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

(உ-27)

### ஈ.பி.ஆர்.எல்.எவ் அறிக்கை

சென்னை, மார்ச் 26

ஈழ விடுதலைக்காக மக்களிடம் இருந்து பெறப்பட்ட நிதித்தொகை விடுதலைப் போராட்ட தேவைகளுக்கே பயன்பட்டது

சழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் இருந்து வெளியேறிய தோழர் மு. டேவிற்சன் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஈ பி ஆர் எல்.எவ் இயக்க மக்கள் விடுதலைப் படை பிரதம தளபதி தோழர் தேவானந்தாவும் அதனை வாரிஜிதம் செய்துள்ளார்.

தோழர் டேவிற்சன் தன்னிடம் இருந்த ஸ்தாபனச் சொத்துக்களையும் நிதியையும் கணக்கு வழக்குடன் ஒப்படைத்து விட்டார் என்று தேவானந்தா எழுதிய கடிதம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது (இ-10)

## எரிபொருள் தடை அகற்றப்படும் வரை
### எதிர்ப்பியக்கம் தொடரும்

யாழ்ப்பாணம், மார்ச் 26

எரிபொருள் பெறுவதற்கு விதித்துள்ள கட்டுப்பாடுகளை ஸ்ரீ லங்கா அரசு அகற்றும் வரை மக்கள் எதிர்ப்பியக்கம் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும்.

இவ்வாறு மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கப் பொதுச் செயலாளர் திரு. தேவராசா அறிக்கை ஒன்றில் கேட்டுள்ளார்

வடபகுதிக்கான எரிபொருள் தவட உட்பட பொருளாதாரத் தடைகளை அரசு தளர்த்தியிருப்பதாக அறிவித்திருப்பது வெறும் பெயரளவிலே ஆகும்.

எரிபொருள் தடைக்கு எதிராக நடத்தப்பட்ட மக்கள் எதிர்ப்பு இயக்கத்தின் விளைவாக அரசு "தளர்த்தல்" முடிவுக்கு வந்ததாயினும் அதன் புதிய நடைமுறைகளும் கட்டுப்பாடுகளும் மக்களை எரிபொருள் பெறுமல் தடுக்கக் கூடியவை

எனவே இராணுவ முகாம்களில் கூபன் பெறும் நடைமுறையும் குறித்த ஓரிடத்தில் மட்டும் எரிபொருள் வழங்கும் முடிவும் நீக்கப்பட வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது (இ-10)

## மின்சார ஊழியர் பற்றுக்குறை நீங்கும்

மானிப்பாய், மார்ச் 26

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திச்சபை உப அலுவலகங்களில் நிலவி வரும் மின்சார ஊழியர் பற்றுக்குறை மிக விரைவில் நீக்கப்படும்.

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திசபை முகாமைத்துவ உதவிச் செயலாளர் திரு சு. பரமநாதன் இதனைத் தெரிவித்தார்

யாழ் அபிவிருத்தி சபையின் பல உப அலுவலகங்களில் மின்சார ஊழியர் பற்றுக்குறை நிலவுவதாகவும்—

அப்பதவிகளை நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு விட்டதாகவும்—

மிக விரைவில் அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டு ஊழியர் பற்றுக்குறை நிவர்த்தி செய்யப்படும் எனவும் அவர் கூறினார் (இ-90)

## பிடிபட்ட சிப்பாய்கள் விசாரிக்கப்படுகின்றனர்

யாழ்ப்பாணம், மார்ச் 26

தம்மால் சிறைப்பிடிக்கப்பட்ட சிப்பாய்கள் மீதான விசாரணையை தமிழீழ விடுதலைப் புலிகள் தற்பொழுது மேற்கொண்டுள்ளனர்.

சிப்பாய்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக விடப்பட்டு விசாரணைகள் நடத்தப்படுகின்றன

சிப்பாய்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் இதுவரை அரசுடனோ அல்லது வேறு கட்சிகளுடனோ தொடர்பு கொள்ளவில்லை.

சிப்பாய்கள் மீதான விசாரணைகள் முடிந்த பின்பே இதுபற்றி சிந்திக்கப்படும் என விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டத் தளபதி திரு கிட்டு தெரிவித்தார்.

(இ-10)

## மனித, மூல வளங்களை பயன்படுத்தும் மனப்பாங்கும் மாணவருக்குத் தேவை
### தொழில்நுட்பக் கல்வியதிகாரிகூறுகிறார்

யாழ்ப்பாணம், மார்ச் 26

எமது பிரதேசத்துக்குரிய மூலவளங்களையும், மனித வளங்களையும் பயன்படுத்தும் மனப்பாங்கு மாணவர்களிடம் உருவாக வேண்டும். எல்லாத் தொழில்களையும் ஒரேவித கண்ணோட்டத்தில் காணும் மன நிலையும் ஏற்பட வேண்டும்

—இவ்வாறு தொழில் நுட்பக் கல்வியதிகாரி திரு.ச. சுப்பிரமணியம் கூறினார்.

இணுவில் சைவப்பிரகாச மகாவித்தியாலய முறைசாராக் கல்வி உடையமைத்தல் பிரிவினரின் ஆண்டு விழாவும் சான்றிதழ் வழங்குதலும் உடைக்காட்சியும் அண்மையில் நடைபெற்றன.

வித்தியாலய அதிபர் திரு எஸ் எம் மூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் உரையாற்றுகையிலேயே கல்வியதிகாரி இப்படிக் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

பட்டப்படிப்போ கல்லூரிப் படிப்போ முடித்துக் கொண்ட ஒரு மாணவன் தொழில் நுட்ப அறிவுப் பயிற்சி இல்லாத காரணத்தால் தன் வாழ்க்கைத் தேவைக்கு தனது குடும்ப அங்கத்தவரையே நம்பியிருக்க வேண்டிய அவல நிலையில் உள்ளான்.

வருடந்தோறும் 26ஆயிரத்து 500 மாணவர்கள் யாழ் குடாநாட்டில் ஜீ சி ஈ உயர்தரத்தை பூர்த்தி செய்யும் போதிலும் சில நூறு பேர் மட்டுமே உயர் கல்வி பெறும் வாய்ப்பைப் பெறுகின்றனர்.

மிகுதியான மாணவர்கள் தம் தொழில் வாய்ப்பினைத் தேடிக் கொள்ள முறைசாராக்கல்விமுறை வாய்ப்பளிக்கின்றது என்றார்.

திருமதி ரதிதேவி, அதிபர் திரு எஸ் எம். மூர்த்தி ஆகியோரும் உரையாற்றினர்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு இராசையா, சங்கத் தலைவர் திரு எஸ். சண்முகலிங்கம் ஆகியோர் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர். (உ-ஊ)

### பிரசைகள் குழு பணிமனை

முள்ளியவளை மார்ச் 26

முல்லைத்தீவுப் பிரசைகள் குழுவின் பணிமனை ஏப்பிரல் மாதம்முதலாம் திகதி தொடக்கம் முல்லைத்தீவு மக்கள் வங்கிக் கட்டட மேல் மாடியில் இயங்கவிருப்பதாகப் பிரசைகள் குழுப் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

### விபத்துக்களைத் தடுக்க பாதுகாப்புச் சபை

திருநெல்வேலி, மார்ச் 26

பாதைகளில் ஏற்படும் விபத்துக்களை தடுப்பதற்கு திருநெல்வேலியில் பாதுகாப்புச் சபை அமைக்கப்பட்டிருக்கிறது

திருநெல்வேலிச் சந்தைக்கு வரும் மக்களின் பாதை விபத்துக்களை தவிர்க்கும் நோக்கிலேயே இந்தச் சபை செயற்பட்டு வருகிறது.

(உ-ரி)

## "மனிதனாக வாழ்வதற்கு சுதந்திர உணர்வு தேவை"

மானிப்பாய், மார்ச் 26

"சுதந்திர உணர்வு இருந்தால் தான் மனிதன் மனிதனாக வாழலாம் சுதந்திரஉணர்வை ஊட்டுவது அறிவு. அறிவைப் பெற்றுத் தருவது கல்வி. இதனை எம் பிள்ளைகளுக்கு கொடுக்கத் தவறின் இன்று எம் இளைஞர்கள் போராடிப் பெற விரும்பும் சுதந்திரத்துக்கு அர்த்தமில்லாமல் போய்விடும்"

இவ்வாறு கூறினார் முன்னாள் அதிபர் திரு. வே. சுந்தரையா.

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. அங்கு பேசுகையிலேயே திரு வே. சுந்தரையா முன்கண்டவாறு குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திரு வை. யோகீஸ்வரன் கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி முன்னாள் அதிபர் திரு. ஆர். சச்சிதானந்தன் கூட்டத்தில் பேசுகையில் கூறியதாவது:

பாடசாலை வளர்ச்சியில் அதிபர்களும் ஆசிரியர்களும் எடுத்து வரும் முயற்சிகளுக்கு ஏற்ப பெற்றோரும் தமது பங்களிப்பைச் செலுத்த வேண்டும். பெற்றோர்களின் ஒத்துழைப்பு இன்றி பாடசாலையை வளர்க்க முடியாது.

பெற்றோர் தம் பிள்ளைகளின் வளர்ச்சிகளை அறியக் கூடிய முறையில் பாடசாலைகளில் சபை விழாக்கள், கலை நிகழ்ச்சிகள் நடத்தி மாணவர் நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்படவேண்டும் — என்றார்.

டாக்டர் எஸ் கி. புவிராசன், திரு. இ. தருமானந்தம், திரு த. மாணிக்கவாசகர் ஆகியோரும் உரையாற்றினர். (உ-90)

### மென்பந்து கிரிக்கெட்

சுன்னாகம், மார்ச் 26

சுந்தரோடை சிக்கோ டிஸ்கோ விளையாட்டுக் கழகத்தின் ஆறுவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடத்தப்படவுள்ள மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஒன்பது பேர் கொண்ட அணிகளுக்கிடையில் மட்டுப்படுத்தப்பட்ட பன்னிரண்டு ஓவர்களைக் கொண்ட ஒரு போட்டியும்—

ஆறு பேர் கொண்ட அணிகளுக்கிடையில் ஆறு ஓவர்களைக் கொண்ட போட்டி ஒன்றும் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

விண்ணப்பங்கள் ஏப்ரல் மாதம் மூன்றும் திகதிக்கு முன் செயலாளர், திரு சின்னத்துரை, சிக்கோ டிஸ்கோ விளையாட்டுக் கழகம், சுந்தரோடை என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(உ-27)


A/L 89 பிரிவு II (விஞ்ஞான பாடங்கள்)

ஆரம்பம்:- 28-03-87 சனிக்கிழமை காலை 7.30 மணி (எமது வழமையான ஆசிரியர் குழுவினால்)

NEW MASTER INSTITUTE

B. M. C. LANE, JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

'நான்' என்னும் எல்லை வரம்பை உடைத்து விடுங்கள். நீங்கள் ஏகப் பெருவெளியாய்த் தோன்றுவதை இனங்காண்பீர்கள்.

— பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா.

உதயன்

உள்ளூர் - வெளிநாட்டு - வர்த்தகம் - செய்திகள்

இல, 15, கஸ்தூரியார் வீதி தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி. 22078
யாழ்ப்பாணம் 26-03-1987 த.பெ இல. 88

# மீண்டும் பேச்சா, எப்படி அது நடக்கும்?

1986 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி சிதம்பரம் குழுமுன் வைத்த யோசனையை ஏற்றுக்கொள்ள ஸ்ரீலங்கா அரசு சம்மதம் தெரிவித்திருக்கிறதாம் இதனை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியே அறிவித்திருக்கிறார்.

வடக்கில் ஒரு மாகாணசபை, கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களைக் கொண்ட ஒரு மாகாணசபை கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளுக்கு அருகில் உள்ள சிங்களப் பகுதிகளைச் சிங்கள மாவட்டங்களுடன் இணைத்தல் வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் ஸ்தாபன ரீதியாக இணைந்து செயற்பட அனுமதித்தல் இதுவே டிசம்பர் 19 யோசனையின் மூலத் தோற்றம். இந்த அடிப்படையை வைத்து ஒரு சாதகமான தீர்வு வடிவத்தை உருவாக்கப் பேச்சு நடத்த வேண்டும்.

டிசம்பர் 19 யோசனையை ஏற்றுக்கொள்வதற்கு ஸ்ரீலங்கா அரசுக்கு மூன்று மாதங்கள் பிடித்திருக்கின்றன அதுவும் குண்டுத்தாக்குதல்கள், குதர்க்கங்கள், குழப்பம் நியாயங்கள் என்று பல திருகுதாளங்களைப் புரிந்த பின்னர் தான் பிரஸ்தாப யோசனையை ஏற்கச் சம்மதம் தெரிவித்திருக்கிறது.

எனினும் ஸ்ரீலங்கா அரசு தனது சம்மதத்தை எந்த நேரத்தில் வாபஸ்பெற்றுப் பின் வாங்கும் என்பது எவருக்குமே தெரியாது. பிரதமர் ராஜீவ் கூட, ஜே ஆர் அரசு தனது சம்மத நிலையில் உறுதியாக இருக்கும் என்று நம்புகிறாரே அன்றி நிச்சயமாகச் சொல்லவில்லை.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு ஸ்ரீலங்கா அரசுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கடைசிச் சந்தர்ப்பம் இதுதான் என்றும் அறியப்படுகிறது. எந்தத் தீர்வும் தமிழர்களுக்கு நீதி வழங்குவதாக இருக்க வேண்டும் என்பதைத் தாம் திட்டவட்டமாக ஜே ஆருக்குக் குறிப்பிட்டதாகவும் ராஜீவ் தெரிவித்திருக்கிறார்.

டிசம்பர் 19 யோசனைக்குச் சம்மதம் என்பது ஒரு வகையில் காலத்தைக் கடத்துவதற்கு ஸ்ரீலங்கா பற்றிக் கொள்ளப்படும் மற்றொரு புதிய கயிறு கடந்த நான்கு வருடங்களாகப் பல சந்தர்ப்பங்கள், தவணைகள், இடைவெளிகள் என்பனவற்றைப் பெற்று இனப்பிரச்சினையை வெகு தந்திரமாக இழுத்தடித்து வரும் ஸ்ரீலங்கா அரசின் போக்கு உலகு அறிந்த தந்திரம்.

இம்முறையைக் கடைசிச் சந்தர்ப்பமாகக் கொடுக்க விரும்பும் இந்தியா, பேச்சுவார்த்தை தீர்வு என்பவற்றுக்குக் குறிப்பிட்ட கால எல்லையை நிர்ணயிக்க வேண்டியது மிகமிக அவசியம். ஆகக் கூடியது ஒருமாத காலத்தில் இறுதித்தீர்வு ஒன்றைக் காணாக வேண்டும் என்று நிபந்தனை விதிக்க வேண்டும்.

புதிய முயற்சி அல்லது கடைசிக் கட்டம் ஆரம்பமாகு முன்னர் பெப்ரவரியில் விதித்த ஏனைய இரண்டு நிபந்தனைகளையும் நிறைவேற்றுமாறு இந்தியா வற்புறுத்த வேண்டும்.

தமிழ்ப் பகுதிகளில் இராணுவத் தாக்குதலை நிறுத்த வேண்டும். (தேவையானல் போராளிகள் சம்மதத்துடன் ஒரு மாத காலத்துக்கு போர் நிறுத்தம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யலாம்) வடபகுதி மீது விதித்த பொருளாதாரத் தடையை முற்றாக நீக்க வேண்டும்.

தானே விதித்த இந்த இரண்டு நிபந்தனைகளை இந்தியா மறந்தாலும் ஈழத்தமிழ் மக்கள் மறக்கமாட்டார்கள். ஏனெனில் இராணுவத் தாக்குதலால் நாளாந்தம் உயிரிழப்பவர்கள், உடைமைகளை இழப்பவர்கள், நெருக்கடியில் வாழ்பவர்கள், பதற்றத்துடன் வாழ்பவர்கள், மனச் சஞ்சலத்துடன் வாழ்பவர்கள் அவர்களே எரிபொருள் தடையால், தொலைத் தொடர்புத் தடையால் செய்தொழில் இழந்து அன்றாட வாழ்க்கையை நடத்தமுடியாமல் கஷ்டப்படுபவர்களும் ஈழத் தமிழர்களே.

டிசம்பர் 19 யோசனையை ஏற்க வேண்டும் என்ற மூன்றாவது நிபந்தனைக்கு ஸ்ரீலங்கா அரசு இணங்கியதால் ஏனைய இரண்டையும் இந்தியா மறந்து விடக்கூடாது.

ஆகவே பேச்சுக்களை மீண்டும் தொடர வேண்டும் என்றால், அதற்கு முன் இராணுவத் தாக்குதல் நிறுத்தப்பட வேண்டும்; பொருளாதாரத் தடையும் நீக்கப்பட்டாக வேண்டும்.

அதே போல, பேச்சுத் தொடங்கினால் ஒரு மாத காலத்திற்குள் இறுதித் தீர்வின் வடிவம் காணப்பட்டாக வேண்டும் என்று புதிய நிபந்தனை விதிக்க வேண்டும்.

தீர்வின் இறுதி வடிவம் தமிழர்களுக்கு நீதி வழங்குவதாக இருந்தால் மட்டுமே அதனை ஏற்குமாறு இந்தியா ஈழத் தமிழ் மக்களைக் கேட்க வேண்டும்.

தமிழ் மக்கள் நிராகரிக்கக் கூடிய தீர்வு வடிவம் எதுவும் உருவாகும் பட்சத்தில், இந்தியா ஈழப் போராட்டத்தையும், விடுதலைப் போராட்ட அணிகளையும் அங்கீகரித்து தமிழர்களுக்கு நீதி கிடைக்க உதவ வேண்டும்

இல்லையேல் மீண்டும் பேச்சுவார்த்தை என்பது, அமெரிக்காவும் அதன் அணிகளும் ஸ்ரீலங்கா அரசை இராணுவ ரீதியாகப் பலப்படுத்தி, இலங்கையை முழு அளவிலான யுத்த பூமியாக்கும் நாசத்துக்கு இந்தியாவும் உடந்தையாக இருந்த கதையாகவே முடியும்.

## தேர்தலில் ஹெய்த் போட்டி

வாஷிங்டன், மார்ச் 25

அமெரிக்கா முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் அலக்ஸாண்டர் ஹெய்க் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் இராணுவ ஜெனரலான ஹெய்க் தாம் ஜனாதிபதியாகும் சந்தர்ப்பம் கிடைத்தால் அணு ஆயுதங்களை முற்றாக ஒழிக்கப்போவதாக அறிவித்தார்.

ஜனாதிபதி நிக்ஸனது நிர்வாகத்திலும் றேகனின் அமைச்சரவையின் ஆரம்பகாலத்திலும் இவர் பணிபுரிந்திருந்தார், (ஒ)

## பெண்கள் மட்டும் பணி புரியும் பொலிஸ் நிலையம்

சென்னை, மார்ச் 25

பெண்கள் மட்டும் பணியாற்றும் பொலிஸ் நிலையம் ஒன்று தமிழ் நாட்டில் திறக்கப்பட்டு உள்ளது.

எழும்பூர் பெண்கள் குழந்தைகள் ஆஸ்பத்திரியில் இப்பெண் பொலிஸ் நிலையம் திறக்கப்பட்டது.

ஒரு சப்இன்ஸ்பெக்டர் 3 தலைமைக் கான்ஸ்டபிள்கள், 18 கான்ஸ்டபிள்கள் இப்பொலிஸ் நிலையத்தில் பணியாற்றுகின்றனர்.

அனைவருமே பெண்கள். (ஒ-எ)

# 1,269 சிப்பாய்கள் பலி!

# 438 பேர் சிறைப்பிடிப்பு

## லிபியத் தளம் மீது சாட் திடீர்த் தாக்குதல்

ஐட்ஜாமீனு, மார்ச் 25

லிபியாவின் தென் பகுதியில் உள்ள பிரதானமான போர் விமானதளம் ஒன்றை சாட் துருப்புகள் முற்றுகையிட்டு 1269 சிப்பாய்களைச் சுட்டுக் கொன்றது.

பல மணி நேரம் நீடித்த இத்தாக்குதல்களில் இராணுவ முகாம் ஒன்று தீக்கிரையானது. 438 லிபியா துருப்புக்கள் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு சாட் இராணுவ தலைமையகம் அறிவித்தது

இத்தாக்குதலின் போது 29 சாட் வீரர்கள் கொல்லப்பட்டதாகவும் 88 பேர் காயம் அடைந்ததாகவும் மேலும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது

பிரான்ஸ் இராணுவ அதிகாரிகளினால் பயிற்றப்பட்ட சாட் வீரர்கள் திடீரென லிபியா விமானத் தளத்தை முற்றுகையிட்டு அதனைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தவுடன் இராணுவ முகாம் மீது தாக்குதலை மேற்கொண்டு அதனை நிர்மூலமாக்கினர் என்று பிரான்ஸ் இராணுவ நிபுணர்கள் நேற்றுத் தெரிவித்தனர். (ஒ)

## பேச்சுவார்த்தைக்கு முன்

## பொருளாதாரத் தடை இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும்

சென்னை, மார்ச் 25

பொருளாதாரத் தடையை நீக்கி இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தும் வரை பேச்சுவார்த்தைகளுக்கு இடமில்லை.

இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியிடம் இதனைத் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டோம்.

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்

இலங்கை அரசு இவற்றை நிறுத்தாத வரை பேச்சுக்களில் கலந்து கொள்ளும்படி தமிழர் அமைப்புக்களை இந்தியா வற்புறுத்தக் கூடாது,

இப்படி திரு, அமிர்தலிங்கம் மேலும் தெரிவித்தார். (இ-எ)

## வெளி உலகில்

## இந்தோனேஷியாவின் கடன் பளு அதிகரிப்பு

ஜகார்த்தா, மார்ச் 25

மூன்றாவது உலக நாடுகளில் ஆறாவது பெரிய கடன்கார நாடாக இந்தோனேஷியா மாறியுள்ளது உலக வங்கியின் தலைவர் பாபர் கோர்னபில் உலகில் எண்ணெய் விலை வீழ்ச்சியடைந்திருப்பதினால் இந்தோனேஷியாவிற்கு இந்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்தோனேஷியாவின் பொருளாதாரத்தை மேலும் பரவலாக்குவதன் மூலம் பாதிப்புக்குள்ளான வர்த்தகத் துறையைக் கட்டி எழுப்ப முடியும். எண்ணெய் விலை வீழ்ச்சியால் 50 வீத வருமானத்தை இழந்த இந்த நாடு மூன்றாவது உலக நாடுகளில் ஆறாவது பெரிய கடன்கார நாடாகவும் மாறியுள்ளது. (ஒ)

## தமதுபதவிக் காலத்தில் கிளர்ச்சியை அடக்க அக்கினோ முஸ்தீபு

மணிலா, மார்ச் 25

பிலிப்பைன்ஸில் கிளர்ச்சியாளர்களைத் தமது பதவிக்காலம் முடிவதற்குள் அடக்கிவிடப் போவதாக அக்கினோ குளுரைத்தார்.

1992ஆம் ஆண்டு தமதுபதவிக் காலம் முடிவதற்குள் அரசியல் தீவிரவாதிகளை அடக்கி விடுவது மிகவும் இலகுவானதாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

நகர்ப்புற பொலிஸ் உத்தியோகத்தர்கள் படுகொலை செய்யப்படுவது குறித்து ஆத்திரமடைந்துள்ள ஜனாதிபதி இடது சாரிகளும் வலது சாரிகளும் தங்கள் கருத்து வேற்றுமைகளை நாட்டின் நன்மையை கருத்தில் கொண்டு ஓரளவு தீர்த்துக் கொள்ள வேண்டும்.

அதே வேளையில் அரசியல் தீவிரவாதிகளுக்கு எவ்விதமான கருணையும் தனது அரசாங்கம் காட்டமாட்டாது என்றும் அக்கினோ தெரிவித்தார். (ஒ)

## 71 பெண்கள் குருத்துவம்

லண்டன், மார்ச் 26

லண்டன் நகரில் உள்ள சென். போல்ஸ் தேவாலயத்தில் 71 பெண்கள் குருப்பட்டம் பெற்றுள்ளார்கள்.

கிறிஸ்தவ தேவாலய வரலாற்றில் இதுவே முதற்தடவையாக இந்தளவு பெண்கள் குருப்பட்டத்தைப் பெற்றுள்ளார்கள். (ஒ)

## சரித்திரத்துக்கு முற்பட்ட குதிரை

பீகிங், மார்ச் 25

சரித்திர காலத்திற்கு முற்பட்ட குதிரை இனமொன்றைச் சேர்ந்த எலும்புக்கூடுகள் சீனாவின் தென்மாகாணமான லயோணிங்கில் ஆராய்ச்சியாளர்களினால் கண்டு பிடிக்கப்பட்டன.

இந்த இனக் குதிரையை 'டாலியன் குதிரை' என்று அழைக்கப்பட்டு வந்தது.

கண்டு பிடிக்கப்பட்ட எலும்புக் கூடுகள் 20ஆயிரம் முதல் 40ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தியவை என்று தெரிவிக்கப்பட்டது (ஒ-எ)

## நினைவு ஸ்தூபி

கடந்த வருடம் வெடித்துச் சிதறிய சலெஞ்ஜர் விண்கலத்தில் பலியான ஏழு பேருக்கும் நினைவு ஸ்தூபி ஒன்றை அமெரிக்க உப ஜனாதிபதி ஜோர்ச்பூஷ் வாஷிங்டனில் திறந்து வைத்தார்.



**பொய்யாமொழி**

குறள்:

கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி.

பொருள்:

கேள்வியறிவால் துளைக்கப்படாத செவிகள், இயற்கையான துளைகள் கொண்டு ஓசையைச்) கேட்ட நிலையிலும் கேளாத செவிட்டுத் தன்மை உடையனவே.

## சைவ மக்களுக்கு 'விற்றமின்' போன்ற நூல்

கிளிநொச்சி, மார்ச் 26

கோப்பாய் சிவம் எழுதிய "சைவ விரதங்கள் ஓர் அறிமுகம்" என்னும் நூல் சைவ மக்களுக்கு "விற்றமின் மாத்திரை" போன்றது.

கோப்பாய் சிவம் எழுதிய சைவ விரதங்கள் ஓர் அறிமுகம் என்னும் நூலை வெளியிட்டு வைத்த பளை அஞ்சல் அதிபர் திரு பிரம்மஸ்ரீ வே. சத்தியமூர்த்தி சர்மா மேற்கண்டவாறு கூறினார்.

பளை மகாவித்தியாலயத்தில் பளை மகாவித்தியாலய கொத்தணி அதிபர் திரு. ஏ. பி. செல்லையா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் கல்விப் பணிப்பாளர், திரு இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (இ-76)

## விமர்சன அரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 26

அ. யேசுராசாவின் 'அறியப்படாதவர்கள் நினைவாக' கவிதைத் தொகுதியின் விமர்சன அரங்கு எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் நடைபெறும்.

திரு. மு. பொன்னம்பலம் தலைமை வகிப்பார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி, திரு. உ. சேரன், திருமதி சித்திரலேகா மௌனகுரு ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர்.

கலை இலக்கிய வட்டம் இந்நிகழ்ச்சியை ஒழுங்கு செய்கிறது. (இ-எ)

## இலவச நூல்கள் வந்தன

முள்ளியவளை, மார்ச் 26

முல்லைத்தீவுக் கல்வித் திணைக்களத்திற்கு இவ் வருடத்திற்குரிய இரண்டாவது தொகை இலவச புத்தகம் இவ்வார ஆரம்பத்தில் வந்து சேர்ந்தது.

இதுவரை 30 ஆயிரம் புத்தகங்கள் வந்துள்ளதாகவும் இன்னும் புத்தகங்கள் வரவேண்டியிருப்பதாகவும் கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர்கூறினார். (உ-93)

## சமயப் பிரசாரத்தை மேலான சேவையாக இந்துக்கள் கருத வேண்டும்

சாவகச்சேரி, மார்ச் 26

சைவசமயப் பெரியார்கள், அறிஞர்கள் சமயப் பிரசாரம் செய்வதை மேலான சேவையாகக் கருதிச் செயல்பட வேண்டும். மக்கள் மத்தியில் இறை நம்பிக்கை வலுவடையவும் சமய உண்மைகள் பற்றிய தெளிவு ஏற்படவும் பிரசாரங்கள் அவசியமாகும்

வேதாகம சோதிட பூஷணம், சிவாசாரிய திலகம் சிவஸ்ரீ சி சிதம்பரநாதக் குருக்கள் இவ்வாறு கூறினார்.

சரசாலை இந்து இளைஞர் மன்றம் ஏற்பாடு செய்த மாதாந்த பிரசாரக் கூட்டம் இலந்தைதிடல் விரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தில் இடம் பெற்றது.

தலைமையுரையின் போது அவர் இதனைக் கூறினார்.

மன்றப் காப்பாளர் டாக்டர் ச. நமசிவாயம், பிரசார செயலாளர் [illegible] ஆகியோர் [illegible] (இ-31)

## நீர்ப்பாசன திணைக்கள பிரதிப் பணிப்பாளர் பணிமனை பளையிலேயே இயங்கும்

கிளிநொச்சி, மார்ச் 26

கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் தொடர்ந்தும் பளையிலேயே இயங்கும்.

இந்த அலுவலகத்தின் தளபாடங்கள் யாவும் கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் இருந்து பளைக்கு கொண்டு வரப்பட்டன.

கடந்த ஜூன் மாதத்தில் கிளிநொச்சியில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக இந்த அலுவலகம் இயங்க முடியாத நிலை ஏற்பட்டது இதனைத் தொடர்ந்து பளையில் அது தற்காலிகமாக இயங்கி வந்தது.

அண்மையில் கிளிநொச்சியிலுள்ள சகல அரசாங்க அலுவலகங்களையும் உடன் திறக்குமாறு வற்புறுத்தி வந்த இராணுவம், இந்த அலுவலகத்திலுள்ள தளபாடங்களையும் தஸ்தாவேஜுகளையும் அப்புறப்படுத்தி இராணுவ பாவனைக்கு அதனை விடுமாறு பளையிலுள்ள நீர்ப்பாசனத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு அறிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து சகல தளபாடங்களும் தஸ்தாவேஜுக்களும் கடந்த வெள்ளிக்கிழமை லொறி மூலம் கிளிநொச்சியிலிருந்து பளைக்கு எடுத்து வரப்பட்டன.

இந்தப் பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் யாழ் [illegible] வவுனிக்குளம், முத்தை [illegible] கவிற்குரிய நீர்ப்பாசன வேலைகளைக் கவனித்து வருவதால் இந்த அலுவலகம் தொடர்ந்தும் பளையிலேயே இயங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-76)

## சமய சந்நிதிகளில்

## இன்று கும்பாபிஷேகம்

காங்கேசன்துறை, மார்ச் 26

கோண்டாவில் மேற்கு சந்திர சேகரப்பிள்ளையார் ஆலய சுப்பிரமணிய சுவாமி ஆலய நூதன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக விழா இன்று சிறப்பாக நடைபெறும்.

பிரபல நாதஸ்வர வித்துவான் கோண்டாவில் வி.கே கானமூர்த்தி தமது செலவில் இந்த ஆலயத்தை அமைத்து கும்பாபிஷேகத்திற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளார்.

வடபகுதியில் உள்ள பிரபல குருமார்கள் இக் கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்டு அதனை நடத்தி வைப்பார்கள்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், கம்பன் கழக அமைப்பாளர் திரு இ. ஜெயராஜ் பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள், தவில் வித்துவான் என். ஆர். சின்னராசா ஆகியோரின் ஆசியுரையும் இடம் பெறும்.

நாதஸ்வர தவில் கச்சேரிகளும் கும்பாபிஷேக விழாவில் நடைபெறும். (உ-68)

## சங்கம் மாற்றியமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26

சங்கானை பட்டினசபை சங்கானை மத்திய ஐக்கிய நாணய சங்கமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

சங்கானை முதலாம் இரண்டாம் மூன்றும் வட்டாரங்களை உள்ளடக்கிய பகுதிகள் இதன் கீழ் வரும்.

மேற்படி சங்கத்தை கூட்டுறவுப் பரிசோதகர் திரு பூ சிங்காரம் ஆரம்பித்து வைத்தார்.

சங்கானை ஐக்கிய நலன்புரிச் சங்க பணிமனையில் ஆரம்ப விழா நடைபெற்றது (உ-10)

## மக்களின் ஆதரவு அதிகரிக்க வேண்டும்

### அஞ்சலிக் கூட்டத்தில் உரை

சாவகச்சேரி, மார்ச் 26

ஸ்ரீலங்கா இராணுவத்திடம் நவீன ஆயுதங்களும் ஏழு நாடுகளது இராணுவ ரீதியிலான ஆதரவும் இருக்கிறது.

ஈழ இராணுவமான விடுதலைப் புலிகளாகிய எம்மிடம் மன உறுதியும், திடமும் நிறைய இருக்கிறது. இதை விட்டு எமது எதிரிகள் போற்றுகிறார்கள். ஈழப் போராட்டத்தின் இறுதிக் கட்டம் நெருங்குகிறது. இந்நிலையில் மக்களின் பூரண ஆதரவும், பங்களிப்பும் எமக்கு வேண்டும்.

இவ்வாறு கைதடி வெடிவிபத்துக்குள்ளான வீரவேங்கைகளின் 31ம் நாள் நினைவஞ்சலிக் கூட்டத்தில் சாவகச்சேரிப் பொறுப்பாளரான திரு சஞ்ஜீவன் உரையாற்றுகையில் கூறினார்.

சாவகச்சேரி சந்தை மைதானத்தில் இடம் பெற்ற இக்கூட்டம் சாவகச்சேரி மக்கள் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது. கூட்டத்திற்குத் திரு. வி. நடராசா தலைமை வகித்தார்.

சா. ம. ஒன்றியத்தலைவர் திரு. சிதம்பரப்பிள்ளை, மீசாலை ம. ஒ தலைவர் திரு. க. நடராசா, டாக்டர் திரு. வே. பிலிப், டாக்டர் சிவராசா முதலான பலரும் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

வீரவேங்கைகள் நினைவாக மரங்கள் நடும் நிகழ்ச்சியும் இடம் பெற்றன. (ஒ-31)

## பாடசாலைகளை விட்டு இடையில் விலகுவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

### பேராசிரியர் கவலை தெரிவிக்கிறார்

பலாலி, மார்ச் 26

தமிழ்ப்பகுதிகளில் பாடசாலைகளை விட்டு வெளியேறி ஆரம்பக் கல்வியினின்றும் இடைவிலகும் மாணவர்களது தொகை அதிகரித்து வருகின்றது கிராமப் புறங்களில் அதிகரித்து வரும் இந்நிலை எமது எதிர்காலத்துக்கு ஆரோக்கியமானதல்ல.

இவ்வாறு நெல்லியடியில் அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய யாழ் பல்கலைக் கழகக் கல்வித்துறைத் தலைவர் பேராசிரியர் ப. சந்திரசேகரம் தெரிவித்தார்-

அவர் மேலும் கூறியதாவது;-

இடைவிலகலுக்கான காரணங்களில் போராட்டச் சூழலும் ஒன்றும் அத்துடன் தொடர்ச்சியாகக் கற்பதிலும் பார்க்க சில காலம் கற்று பின்னர் வெளிநாடுகளுக்குச் சென்று பணம் சம்பாதிக்க முடியும் என்று வாழ்க்கையின் விழுமியத்தில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றம்தான் இவ்விடைவிலகலின் முக்கிய காரணி.

அத்துடன் எமது நாட்டில் கட்டாய கல்வித் திட்டமின்மையும் ஒரு காரணியாகும்.

வவுனியா, முல்லைத் தீவு. மன்னார் மாவட்டங்களிலும் கிழக்கில் அதிகளவு இடைவிலகல் நடைபெறுகின்றது. குடாநாட்டிலுள்ள சில கிராமங்களில் 70 வீதமான குழந்தைகள் கல்வியின் ஆரம்பத்திலேயே பெறுதவறுகள் என்ற செய்தி அதிர்ச்சியைத் தருகின்றது என்று கூறினார். (உ-119)

## பரீட்சைகள் ஆரம்பமாகின

கரவெட்டி, மார்ச் 26

1987 ஆம் ஆண்டு முதலாம் தவணைப் பரீட்சைகள் வடமராட்சிப் பகுதிகளில் ஆரம்பமாகி ஒழுங்கான முறையில் நடைபெற்று வருகின்றன

வடமராட்சி பகுதிக்கென இயங்கி வரும் நெல்லியடி கோட்டக் கல்வி அலுவலகம் அந்த அலுவலகத்திற்குட்பட்ட 83 பாடசாலைகளுக்கும் பரீட்சைக்குரிய வினாத்தாள்களை விநியோகித்து வருகின்றது. (உ-70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியல் : திரு வரதராஜன்
திரு K. S. முத்துலிங்கம்
கணக்கியல் : திரு. வன்னியசிங்கம்
வர்த்தகம் : திரு. தேவா
அளவையியல் : திரு சுப்பிரமணியம்
தமிழ் : திரு இராஜேந்திரா
இந்து நாகரிகம் : அருள் நங்கை
அரசியல் : பஃறுாவ்
ரேயல் இன்ஸ்ரிரியூட்
நவாலி, -- மானிப்பாய்.

# உதயன்

26 - 03 - 1987 வியாழக்கிழமை

ரேயல் இன்ஸ்ரிரியூட்
நவாலி, -- மானிப்பாய்
சிந்தாமணி பிள்ளையார் கோவிலடி
மகளிர் கல்லூரி அருகு
O/L, Day Classes
G. C. E, A/L 1988 -- 89
நடைபெறுகின்றன

## வித்தாரம்

தம்பி முரளியார், வாரும். உம்மடை நேற்றையில் ஆசை உடனேயே நிறைவேறிச்சுது எண்டு நினைக்கிறன். முத்திரைச் சந்தையில எத்தனை மணி நேரம் மினக்கெட்டனாய்?

முத்திரைச் சந்தையில இருந்து கொஞ்சத்தூரம் நாயன்மார்கட்டு யுத்தக் கைதியள் காட்சிக்கு இருத்தப்பட்டவர் என்டதை அறிஞ்சோ என்னவோ நாயன்மார்கட்டில ஹெலி அடிக்கடி சுத்தினதோடை துப்பாக்கிப் பிரயோகமும் செய்தது.

நேற்று முழுக்க ரவுண் பக்கமும் நல்லூர்ப் பக்கமும் ஹெலி ரோந்து எச்சச்சக்கமாய் நடத்திது. பின்னேரமும் மூண்டு ஹெலியள் சுத்திச்சினம் பாக்கயில்லையே.

ஹெலி ரோந்தின்ரை அர்த்தம் என்ன எண்டு சரியாத் தெரியயில்லை.

தெருவில நிண்டு விண்ணனம் பாக்கிற எங்கடை சனம் ஒவ்வொண்டும் சொல்லுற அர்த்தங்களை விளக்கங்களைக் கேட்டால் ஒரு புத்தகமே எழுதிவிடலாம் போல இருக்கு.

வீட்டில இருந்தால் என்ன, றோட்டில நிண்டால் என்ன சாவு வாற நேரம் வரத்தான் செய்யும். அது உண்மை. அதுவும் சமத்தில தமிழனுக்குத் தலைக்கு மேலை மரணம் நிக்குது.

அதுக்காக ஹெலி சுடேக்கையும் வெளியில றோட்டில நிண்டு விடுப்புப் பாத்து வீணாச் சாகவேணுமே.

அப்பிடிச் செய்யிறவை எங்கடை தம்பிமாருக்கு உதவியாய் போய் பேசாமல் செத்தால் எவ்வளவு பிரயோசனம் விரசணமாயும் முடியும்.

நான் கொழும்பில இருக்கேக்கை சிங்களச் சனம் தான் விடுப்புப் பாக்கிறதில முன்னணியில் நிக்குதுகள் எண்டு நினைச்சது. ஏன் தெரியுமோ? "பேவ்மெண்டில" ஒருதன் நடைபாதையில ஒரு துண்டுத் துணியை விரிச்சு ஏதாவது மரக்கட்டை, பாம்புத் தோல் எண்டு வைச்சுக் கொஞ்சக் கதை அடிச்சா ஆயிரக்கணக்காய் அதைச் சுற்றி நிக்கும். நடைபாதையில நாலு கோடுகளைக் கீறி ஏதாவது அலம்பினால் அதைப் பாக்கவும் ஆயிரம் சனம் கூடும்.

ஆனால் இஞ்சை யாழ்ப்பாணத்தில விடுப்புப் பாக்கிற கூட்டத்தைப் பாக்கேக்கை சிங்களச் சனம் எங்கடை சனத்திட்டை பிச்சை வாங்க வேணும் போல இப்போது தோன்றுது!

அண்டைக்குத் திங்கட்கிழமைக் கொட்டடிச் சந்தியிலை, பொம்மர் அடி நடக்கேக்கை பாதுகாப்புத் தேடிப் பதுங்கிச் சனத்தை விட, விடுப்புப் பாக்கப் போனவைதான் கூடவாம்.

விடியப்புறம் நாவலர் மணிக்கு இடம்பெயர்ந்து போன சனத்தை விட றோட்டில நிண்டு நியூஸ் கேட்டவை தான் கூட. ரவுணில இருந்து ஆனைக்கோட்டை வரை ஒவ்வொரு வீட்டு படலைக்குப் படலையாய் சனம் முன்னால நிண்டதை நேரில பாத்தேனே! அப்ப இஞ்சை வேம்படி மெயின்வீதி. ஆஸ்பத்திரி வீதிப் பக்கமாய் பெரும் மர் அடி நடந்துகொண்டிருந்தது எங்கடை சனம் செய்யவேண்டியதைச் செய்யாது; தேவையில்லாத வேலையள் என்டால் மும்மரமாய் நிக்குங்கள்.

அதசரி யுத்தக் கைதியளை மீட்க அரசாங்கத்தார் இன்னும் முயற்சி எதுவும் செய்யயில்லை எண்டு கதைக்கினம்.

ஆறுதல் இவைக்குத் தாதுபோகச் சரியான ஆக்கள் இடைக்கயில்லை என்டதுதான் எனக்குத் தகவல். தமிழ்ப் பிரமுகர்கள் பலபேரை Try பண்ணின வையாம். ஒருத்தரும் முன்னுக்கு வரயில்லையாம்.

போனமுறை அச்சாணியார் முதலில பெரிய கொச்சிதம் எல்லாம் பேசிப்போட்டு பிறகு நனைஞ்ச கோழி மாதிரி கலில விழாத குறையா ஒரு மதியன்ரை காலைக் கண்டுபிடிச்சு மன்றாடி பிடிச்ச இரண்டு யுத்தக் கைதியளை மீட்பிச்சு சிங்களச் சனத்திட்டை தன்ர தப்பியத் தம்பிரான் புண்ணியம் எண்டு பெருமூச்சு விட்டார்!

விடுவிச்ச யுத்தக்கைதியளைக்கொண்டு புலியளுக்கு அவமானம் தேடிக் குடுக்கிறமாதிரிப் பிரசாரப் பிசகுகளையும் செய்தவர்.

அதால இந்தமுறை தம்பிமாரோடை போய்க் கதைக்க எந்த மதியஸ்தரும் முன்னுக்கு வர மாட்டினம் என்டது சொல்லாமலே விளங்க வேணும்.

இந்தியாவான இந்தியாவின்ரை மத்தியஸ்தத்தையே கேலிக்கூத்தாக்கிற அச்சாணியாரையும் அரசாங்கத்தையும் நம்பிக் காலை வைக்கயார் முன்னுக்கு வருவான்?

ஆனால் குடாநாட்டில பழையபடி சி. ஐ. டி. நடமாட்டம் கூடியிருக்கும் மாப்போல தெரியுது. சனத்தோடை சனமாய் சிவில்ல சி. ஐ. டி யள் திரியிறதாய்க் கேள்வி. நானே முந்தநாள் நாலு மணிபோல ஒருத்தரைக் கண்டேனே! இடம் கணிக்கூட்டு வீதி.

போனமுறை இரண்டு பேர். இந்தமுறை எட்டுப்பேரெல்லே! எப்பிடியும் மீட்டுவிட வேணும் எண்டு துடியாய்த் துடிப்பினம் என்டது நிச்சயம். ஆனால் வெளியால காட்டிக்கொள்ளாமல் இருக்கினம்.

எட்டுப்பேர் என்டபடியால், எங்கடை தம்பியள்ள் இந்தமுறை வைக்கிற நிபந்தனை கொஞ்சம் காத்திரமாய் இருந்தால் நல்லது. செஞ்சிலுவைச் சங்கம் போன்ற சர்வதேச ஸ்தாபனங்கள் மூலம் யுத்தக் கைதியளைக் கையளிச்சா திம்பிட்டிழமைச் சாதனையைத் தக்கபடி பாவிச்சு சர்வதேச மதிப்பையும் பெறலாம் என்டது என்ரை எண்ணம்.

போராடும் இரண்டு நாடுகளுக்கு இடையில் கைதியளைத் திருப்பிக் குடுக்கச் சர்வதேச ஒழுங்குவிதியள் சில இருக்கு. அதுகளையும் கவனத்திற் கொண்டு தங்கடை சாதனையை இந்தமுறை தங்களுக்குச் சாதகமாக்கிற துக்குத் தம்பிமார் நீர்க்க ஆலோசிச்சுச் செய்கினம் எண்டு நம்பிறேன்.

இங்கிணக்கோட்டிடி

## கண்ணிவெடிக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணிவெடித் தாக்குதல் நடத்தினர்.

கண்ணிவெடியில் சிக்கிய பவ்வின் வாகனம் சுக்குநூறாகியது. அதில் பயணம் செய்த 15 கொமாண்டோப் படையினர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஒரு டிரக் வண்டியும் இத்தாக்குதலில் சேதமடைந்ததாகக் கூறப்படுகிறது.

மரணமடைந்தவர்களின் சடலங்களை ஹெலிக்கொப்டரில் வந்த படையினர் ஏற்றிச் சென்றனர்.

இதேவேளை இச்சம்பவம் பற்றி, நேற்று அரசு விடுத்த அறிக்கையொன்றில் 8படையினர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது (உ-10)

# சுதந்திரக் கட்சி 5மாதங்களில் ஆட்சிக்கு வரும்

## சிறிமா சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 26

இன்னும் நான்கு, ஐந்து மாதங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வரும். அப்போது சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்போம்.

— இப்படி சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

இரத்தினபுரியில் நடந்த சுதந்திரக் கட்சி மாதர் மாநாட்டில் திருமதி பண்டாரநாயக்கா பேசினார். அப்போதே அவர் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது;

ஆட்டுப்பண்ணை மாட்டுப் பண்ணை போன்று 'குழந்தைகள் பண்ணை'கள் இன்று நாட்டில் நடத்தப்படுகின்றன.

இங்குறப அரசின் தாராளக் கொள்கை யால் குழந்தைகளும் விற்பனைப் பொருளாகி விட்டன.

இன்று அல்சேசன் நாய்க்குட்டி ஒன்றின் விலை 3 ஆயிரம் ரூபா. ஆனால் குழந்தை ஒன்றின் விலை ஐநூறு ரூபா. இதுதான் இன்று இவர்கள் கையில் காணப்படும் நிலை.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களான முதலாளிமார்களே இந்த வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள புலிகளுக்கு ஆயுதங்களைத் தருவித்து வழங்குபவர்களும் இவர்களே.

நாட்டுக்குச் சரியான பாதுகாப்பு இல்லை. இதைப் பயன்படுத்தியே புலிகள் ஆயுதங்களைக் கொண்டு வருகின்றனர்.

— இப்படி திருமதி பண்டாரநாயக்கா சொன்னார் (உ-எ)

# நாளைதொடக்கம் பிரார்த்தனை வாரம்

## வெகுஜன இயக்கம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 26

நாளை தொடக்கம் ஏப்ரல் 3ஆம் திகதிவரை பிரார்த்தனை வாரமாக மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் பிரகடனப்படுத்தி உள்ளது.

★ மனித உரிமைகளை நிலைநிறுத்துவது

★ விரைவில் சுமுக தீர்வு ஏற்பட்டு நிரந்தர, நீதியான சமாதானம் உண்டாக இறைவனை இறைஞ்சுவது

★ இதற்குத் தேவையான ஆன்மபலம் பெறுவது.

மேற்கண்ட அம்சங்களை முன்வைத்து இப்பிரார்த்தனை வாரத்தை ஒழுங்கு செய்திருப்பதாக வெகுஜன இயக்கம் அறிவித்துள்ளது.

பக்கத் தலைமையகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

அன்னையர் முன்னணி, சனசமூக நிலையங்களின் சமாஜம், தேசிய கலை இலக்கியப்பேரவை, குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம், மத நிறுவனங்கள், வெகுஜன ஸ்தாபனங்கள், தொழிற் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இயக்கத் தலைவர் சட்டத்தரணி திரு. இ. சிவரத்தினம் தலைமை வகித்தார்.

பிரார்த்தனை வாரத்தை பாடசாலைகள், மத வழிபாட்டுத் தலங்கள், தொழில் நிலையங்கள் ஆகிய இடங்களில் அனுஷ்டிக்கப்பட வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

பிரார்த்தனை வார இறுதி நாளான ஏப்ரல் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை யாழ் செயலக முன்றலில் சகல மத ஸ்தாபனங்களும் கலந்துகொள்ளும் பிரார்த்தனை வைபவம் இடம் பெறும். (உ-எ)

## 8 யுத்தக்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னர்

இதேவேளை ஹெலிக்கொப்டர் ஒன்றும் நேற்றுக் காலை இப்பகுதியை சுற்றி வட்டமிட்டது. இதனால் பொதுமக்கள் சிலர் அப்பகுதியிலிருந்து சிதறி ஓடினார்கள்.

பண்ணைப் பொலிஸ் விடுதியில் இருந்து இவர்களைப் புலிகள் பிடித்த சமயம், இவர்கள் அணிந்திருந்த சீருடைகளுடனேயே மக்கள் பார்வைக்கு அவர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர்.

எட்டு சிப்பாய்களின் கைகளும் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருந்தன.

சில சிப்பாய்களின் சீருடையில் இரத்தக் கறைகளும் காணப்பட்டன.

சிப்பாய்களிடம் இருந்து மீட்கப்பட்ட நவீன ரக ஆயுதங்களும், ரவைகளும் அங்கு பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

காலை 11 மணி அளவில் விடுதலைப் புலிகளின் வசமான வாகனத்தில் இவர்கள் ஏற்றி வரப்பட்டனர் (உ-எ-10)

## நாவற்குழி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புலிப் போராளி ஒருவர் மரணமடைந்தார்.

இரண்டு பேர் காயமடைந்தனர்,

அரியாலைப் பக்கமாக பத்துக்கு மேற்பட்ட ஷெல் குண்டுகள் ஏவப்பட்டன.

அவற்றில் ஒன்று விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு அரணுக்கு அண்மையில் விழுந்து வெடித்ததால் மேற்படி போராளி மரணமானார்.

இதனையடுத்து காலை எட்டுமணி அளவில் பலாலிப் பக்கமாக இருந்து வந்த மூன்று ஹெலிக்கொப்டர்கள் நாவற்குழி அரியாலைப் பகுதிகளைச் சுற்றி வட்டமிட்டு தாக்குதல் நடத்தின.

இதன்காரணமாக இருவர் காயமடைந்தனர். வீடுகள் பலவும் சேதமடைந்தன.

கோப்பாய் பகுதியில் ஹெலிக்கொப்டர் நடத்திய தாக்குதலில் ஒருவர் காயமடைந்தார். சில வாகனங்களும் சேதமடைந்தன. (உ-10)

## இப்படியும்——

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டது

திண்மையைக் குழப்பித் துரோகம் செய்யும் பேர்வழிகளிற் பலர் காங்கேசன்துறை முகாமிலேயே பெர்மிட் பெற்றிருப்பதாக உதயனுக்கு அறிய வந்துள்ளது (அ-10)

## கோட்டைப் . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இடம் பெற்றதாகவும் கூறப்படுகிறது.

இதன் காரணமாக மேற்படி காங்கேசன்துறை வீதியில் தேரடி முட்டியில் காவல் புரிந்த ... புலோலியைச் சேர்ந்த ... ரத்தினம் (25 வயது) என்பவரே காயமடைந்தவராவார். (உ-10)

## முட்டைக் கரு எய்ட்ஸுக்கு மருந்து

டெல் அவிவ், மார்ச் 26

எய்ட்ஸ் நோய்த் தடுப்பு மருந்து முட்டைக் கருவில் இருந்து தயாரிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இஸ்ரவேல் வைத்திய நிபுணர் ஒருவர் இதனைக் கண்டு பிடித்திருக்கிறார்.

எய்ட்ஸினால் பீடிக்கப்பட்டுள்ள 10 அமெரிக்கர், 4 இஸ்ரவேலர் ஆகியவர்கள் மீது முதலில் இத்தடுப்பு மருந்து பரிசோதித்துப் பார்க்கப்படும் (உ-எ)

## இராணுவப்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தில் சேரும் ஒருவர், முதல் டன்னிரண்டு ஆண்டு காலம் நிரந்தரப் பணியில் ஈடுபடுத்தப்படுவார். மிகுதி 10 ஆண்டுகளும் ரிஸர்வ் படையில் அமர்த்தப்படுவார். (உ-ா)

## வல்வெட்டித்---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மதிக்கப்பட்டார்.

இரண்டு முகாம்களில் இருந்தும் 25க்கு மேற்பட்ட ஷெல்கள் ஏவி விடப்பட்டன.

இந்தப் பயங்கரத் தாக்குதல் சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது.

முகாம்களுக்கு அருகில் வாழும் மக்கள் அச்சம் காரணமாக இடம் பெயர்ந்தனர்.

பயங்கர ஷெல் தாக்குதல் இடம் பெற்றும் பெரிய சேதம் ஏற்படாமைக்குக் காரணம் பனைகள்தான்.

ஷெல் தாக்குதலைத் தடுத்து நிறுத்திய பல பனைகள் முறிந்தும் குருத்துச் சிதறியும் காணப்பட்டன. (உ-எ-160)

## தோம்பூரில்---

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

கிராமத்தில் முகாமிட்டு இருந்தனர். இம்முகாம் அமைக்கப்பட்ட பின்னர் பலர் இராணுவத்தால் கோரமாகக் கொல்லப் பட்டதுடன் பச்சைநாம், இளக்கந்தை போன்ற பல தமிழ்க் கிராமங்கள் வேட்டையாடப்பட்டன.

இவ் ஒழிப்பை மேற்கொள்ளும் நோக்கத்துடன் படையினர் புறப்பட்டிருந்த சமயம் எமது தோழர்களால் நிலத்தடியில் புதைக்கப்பட்ட ஆர். டீ. 155 ரக கொமாண்டோ மோட்டார் தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர்.

இத்தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாத இராணுவம் பத்து அப்பாவி இஸ்லாமியரைப் பலி கொண்டதுடன், இஸ்லாமியருக்குச் சொந்தமான ஐந்து வீடுகளையும் இரண்டு கடைகளையும் நாசமாக்கியுள்ளனர்.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. (உ)

# ஆசியாவின் உயர்ந்த கோபுரத்துக்கு நேற்று மகா கும்பாபிஷேகம்

சென்னை, மார்ச் 26

நேற்றுக்காலை 10-15 மணிக்கு ஸ்ரீரங்கநாதர் ஆலய சம்ரோக்சன மகா கும்பாபிஷேகம் பக்திபூர்வமாக நடந்தேறியது.

ஆசியாவிலேயே மிக உயர்ந்த கோபுரத்தைக் கொண்டது இந்த ஆலயம்.

ஆலய ராஜகோபுரத்தின் உயரம் 236 அடி. சுமார் 2 கோடி ரூபா செலவில் கடந்த 8 வருடங்களாக இக் கோபுரத் திருப்பணி இடம் பெற்றது.

நேற்று நடந்த கும்பாபிஷேக வைபவத்தில் லட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

துணை ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன், முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் ஆகியோர் கும்பாபிஷேகத்துக்கு வருகை தந்திருந்தனர். (உ-எ)

## இயங்கவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ் கோட்டையில் உள்ள வங்கிக் கிளைகளோ தபால் அலுவலகத்துக்கோ நேற்று ஊழியர்கள் எவரும் கடமைக்குச் செல்லவில்லை.

நேற்று யாழ் கோட்டை முகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் காரணமாகவே ஊழியர்கள் கடமைக்குச் செல்லாது திரும்பினர்.

# சென்ரல் - சென். ஜோன்ஸ் கிரிக்கெட் மோதல் 3, 4 ஆம் திகதிகளில்?

யாழ்ப்பாணம், மார்ச் 26

வடமாநிலத்தின் மாபெரும் ஆட்டமான சென். ஜோன்ஸ், யாழ் மத்திய கல்லூரி (சென்ரல்) அணிகளுக்கிடையேயான கிரிக்கெட் போட்டி நடைபெறுவது பெரும்பாலும் முடிவாகி உள்ளது.

இதற்கான இறுதித் தீர்மானம் இன்று மார்ஜிதப்படுத்தப்படும்.

இந்தப் போட்டிகள் ஏப்ரல் மாதம் 3 ஆம், 4 ஆம் திகதிகளில் நடைபெறும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டத்தை விளையாடுவதற்கு அனுமதி கிடைக்குமேயானால் அது நடைபெறுவது பெரும்பாலும் உறுதியாகிவிடும். (உ-7)

# கேரளா, காஷ்மீர் மே. வங்காளத்தில் இன்று புதிய அமைச்சரவைகள்

புதுடில்லி, மார்ச் 26

கேரளா ஜம்மு-காஷ்மீர் மாநிலங்களில் முறையே இடதுசாரி ஐக்கிய முன்னணியும் இந்திரா காங்கிரஸ் - தேசியப் பேரவைக் கட்சிக் கூட்டணியும் அறுதிப் பெரும்பான்மை ஆசனங்களைப்பெற்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ளன.

மேற்கு வங்காளத்தில் இடதுசாரி முன்னணி மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்றது.

கேரளா மாநிலத்தில் ஆட்சியைக் கைபற்றிய இடதுசாரி ஐக்கிய முன்னணியின் அமைச்சரவை திரு. ஈ. கே. நயினார் தலைமையில் இன்று பதவி ஏற்க உள்ளது

இதுவரை காலமும் ஆட்சி நடத்திவந்த ஐக்கிய ஜனநாயக முன்னணி அமைச்சரவையின் முதலமைச்சர் திரு கே. கருணாகரன் தனது இராஜினாமாவைச் சமர்ப்பித்துவிட்டார்.

ஜம்மு-காஷ்மீரில் இந்திரா காங்கிரஸ் - தேசிய பேரவைக் கட்சிக் கூட்டணி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றது.

ஜம்மு-காஷ்மீர், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களின் புதிய அமைச்சரவைகள் இன்று பதவி ஏற்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ-எ)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 17-4-1956
மறைவு: 17-3-1985


திருமதி
தவமணி சக்திவடிவேல்
திதி: 26-03-1987

எத்தனை ஆயிரம் ஆண்டுகள் மறையினும்
எத்தனை காலங்கள் நாம் இங்கு வாழினும்
அத்தனை காலமும் உம் உரு நெஞ்சிலே
போற்றிடுவோம் உம் ஆத்ம சாந்திக்கே.

கணவன், பிள்ளைகள், பெற்றோர், சகோதரர்கள், மாமி, மச்சான்மார், மச்சாள்மார், பெருமகள். உறவினர்

சரஸ்வதி மஹால், கோணுவலை, வயாவிளான்
(1156)

வடக்கின் மிகப் பிரபல்யமான
பாடசாலை கிரிக்கெட் வீரர் தெரிவு 1987
உதயன் நிறுவனத்தின் ஆதரவோடு
யாழ் ஜொ லிஸ்ராஸ் லியன்ஸ்
விளையாட்டுக் கழகங்கள் இணைந்து நடத்தும்
மிகப் பிரபல்யமான
கிரிக்கெட் வீரரை வாசகர்கள்
தெரிவு செய்யும் போட்டி



வீரரின் பெயர் ________
கல்லூரி ________
வாக்காளர் பெயர் ________
விலாசம் ________
ஒப்பம் ________

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்ட திகதி 26 - 03 - 1987 தொலைபேசி இல. 24205, 23078

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at th General Post Office, Under Number QJ / 94 /N /87. Telephone, 24205, 23078

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org